முதன்மைச் செயலர்/ஆணையர்
31 மார் 2016
எழிலகம், சென்னை-600 005
சுங்க ஆணையர் (க.தொ.)
சேப்பாக்கம்
31 மார் 2016
சென்னை-600 005
அலுவலகம்

**சுருக்கம்**

தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 – திரைப்படங்கள் – சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை ஏற்று **"புகழ்"** தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்கு அளித்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**வணிகவரி மற்றும் பதிவு (சி1) த்துறை**

**அரசாணை (டி) எண். 104**

8381

**நாள்: 31.03.2016**
**மன்மத, பங்குனி 18,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2047**

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (டி) எண்.529, வணிகவரி (ம) பதிவுத்துறை, நாள் 31.12.2015.
2. சென்னை உயர்நீதிமன்றத்தின் 16.03.2016–ஆம் நாளிட்ட ஆணை. (நீதிபேராணை எண்.8797/2016 மற்றும் WMP 7805&7806/2016)
3. முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் கடித எண்.சட்டக் குழு–4/6582/2016, நாள் 21.03.2016 தேர்வுக்குழு எண்.90/2015–2016.
4. சென்னை உயர்நீதிமன்றத்தின் 22.03.2016–ஆம் நாளிட்ட ஆணை. (நீதிபேராணை எண்.8797/2016 மற்றும் WMP 7805&7806/2016)
5. இந்திய தேர்தல் ஆணையம் புதுடெல்லி கடித எண்.437/TN-LA/2016 (MCC), நாள் 28.03.2016.

-----

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின் பார்வையிட்ட உறுப்பினர்களில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் பரிந்துரைக்காததாலும், பரிந்துரை சமஅளவில் இருந்ததாலும், 09.01.2012 நாளிட்ட வணிகவரி ஆணையரின் செயல்முறை ஆணையின் அடிப்படையில் **"புகழ்"** தமிழ் திரைப்படம் தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் கேளிக்கை வரியிலிருந்து விலக்களிக்க **தகுதியானது அல்ல** என ஆணை வெளியிடப்பட்டது.

2. மேற்கண்ட அரசாணையினை எதிர்த்து, **"புகழ்"** திரைப்படத்தின் தயாரிப்பாளர் அவர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தார். மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட ஆணையில், சென்னை உயர்நீதிமன்றம், **"புகழ்"** திரைப்படத்தினை ஏற்கனவே பார்வையிட்ட தேர்வுக் குழு உறுப்பினர்கள் நீங்கலாக, அலுவல் சாரா உறுப்பினர்கள் பட்டியலில் உள்ள ஐந்து உறுப்பினர்கள் மீண்டும் இத்திரைப்படத்தினை பார்வையிட்டு அவர்களது பரிந்துரையினை பெற்று மூன்று நாட்களுக்குள் நீதிமன்றத்துக்கு நேரடியாக சமர்ப்பிக்க வேண்டுமென உத்தரவிட்டது.

3. அதன் அடிப்படையில், முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர் **"புகழ்"** திரைப்படத்தினை மீண்டும் பார்வையிட ஐந்து அலுவல் சாரா உறுப்பினர்கள் கொண்ட ஒரு தேர்வுக்குழுவினை நியமித்தார். சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி நியமிக்கப்பட்ட 5 அலுவல்சாரா உறுப்பினர்கள் **"புகழ்"** தமிழ் திரைப்படத்தை முழுமையாக பார்வையிட்டு, பார்வையிட்ட ஐந்து உறுப்பினர்களும் இத்திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்கு அளிப்பதற்கு பரிந்துரை செய்துள்ளதாக முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர் பார்வை 3–ல் குறிப்பிடப்பட்ட கடிதத்தில் அரசுக்கு தெரிவித்துள்ளார். மேற்காணும் ஐந்து உறுப்பினர்களின் பரிந்துரைகள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

4. சென்னை உயர்நீதிமன்றம் மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட ஆணையில் **"புகழ்"** திரைப்படத்தினை பார்வையிட்ட ஐந்து அலுவல் சாரா உறுப்பினர்கள் வழங்கிய பரிந்துரைகளை ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் உரிய ஆணைகள் வெளியிடுமாறு அறிவுறுத்தியுள்ளது.

5. மேற்கண்ட சூழ்நிலையில், சென்னை உயர்நீதிமன்ற உத்தரவிற்கு இணங்கவும், கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின் பார்வையிட்ட அனைத்து உறுப்பினர்களின் பரிந்துரையை ஏற்றும், மேலே ஐந்தில் படிக்கப்பட்ட கடிதத்தில் இந்திய தேர்தல் ஆணையம் புதுடெல்லி வழங்கியுள்ள இசைவின் அடிப்படையிலும், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் பிரிவு 8, உட்பிரிவு 2ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி, **"புகழ்"** தமிழ் திரைப்படத்திற்கு ஆணையிடப்படும் நாள் முதல் கேளிக்கை வரியிலிருந்து விலக்களித்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசீமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர் (முகூபொ).

<u>பெறுநர்</u>

முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
செயலாளர், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
இயக்குநர், தமிழ்வளர்ச்சி துறை, சென்னை–8.
சம்பந்தப்பட்ட படத்தயாரிப்பாளர்.

நகல்:
சிறப்பு நேர்முக உதவியாளர்,
அமைச்சர் (வணிகவரி மற்றும் பதிவு) அலுவலகம், சென்னை–9.
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

31/3/2016
பிரிவு அலுவலர்.
31/3/16